K

# முதல் திருப்புதல் பொதுத் தேர்வு-2020

## பன்னிரெண்டாம் வகுப்பு

Reg.No. [ ] [ ] [ ] [ ] [ ] [ ]

நேரம்: 3.00 மணி

## கணக்குப்பதிவியல்

மதிப்பெண்கள்: 90

### பகுதி - I

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 20 x 1 = 20

1. நிலை அறிக்கை ஒரு
   a) வருமானம் மற்றும் செலவுகள் அறிக்கை
   b) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை
   c) ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு
   d) கடன் நடவடிக்கைகளின் தொகுப்பு
2. கடனாளிகள் தொடக்க இருப்பு ரூ.50,000; பெற்ற ரொக்கம் ரூ.1,30,000; கடன் விற்பனை ரூ.1,25,000 எனில் கடனாளிகள் இறுதி இருப்பு
   a) ரூ.30,000 b) ரூ.1,30,000 c) ரூ.60,000 d) ரூ.45,000
3. உயில் கொடை ஒரு
   a) வருவாயினச் செலவு b) முதலினச் செலவு
   c) வருவாயின வரவு d) முதலின வரவு
4. பொருத்துக:
   a) சந்தா - வருவாயின செலவு
   b) பரிசு நிதி - முதலினச் செலவுகள்
   c) Purchase of books for library - முதலின வரவு
   d) Postage charges - வருவாயின வரவு
   a) 2 1 4 3 b) 4 3 2 1 c) 4 3 1 2 d) 3 1 4 2
5. கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாத போது கூட்டாளிகள் பெறத் தகுதியுடையது.
   a) சம்பளம் b) கழிவு c) கடன் மீது வட்டி d) முதல் மீது வட்டி
6. இந்தியாவில் கூட்டாண்மை பதிவு
   a) கட்டாயம் b) கட்டாயமில்லை
   c) விருப்பத்திற்கு உட்பட்டது d) மேற்கூறிய எதுவுமில்லை
7. சரியானதை தேர்வு செய்க:
   a) உயர் இலாபம் = சாதாரண இலாபம் + சராசரி இலாபம்
   b) உயர் இலாபம் = சாதாரண இலாபம் – சராசரி இலாபம்
   c) உயர் இலாபம் = சராசரி இலாபம் + சாதாரண இலாபம்
   d) உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்
8. நற்பெயரின் வகைகள் ________.
   a) 2 b) 3 c) 4 d) 5
9. கூட்டாளி சேர்ப்பின் போது நற்பெயரானது மதிப்பீடு செய்யப்பட்டு யாருடைய முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்?
   a) அனைத்து கூட்டாளிகள் b) புதிய கூட்டாளி
   c) பழைய கூட்டாளிகள் d) தியாகம் செய்த கூட்டாளிகள்
10. மறுமதிப்பீட்டில் கட்டிடத்தின் மதிப்பு உயர்வது
    a) செலவு b) நட்டம்
    c) ஆதாயம் d) இவற்றுள் எதுவுமில்லை
11. விலகும் கூட்டாளிக்குரிய தீர்வுத்தொகை உடனடியாக செலுத்தாதபோது, அது மாற்றப்படும் கணக்கு
    a) வங்கி க/கு b) விலகும் கூட்டாளியின் முதல் க/கு
    c) விலகும் கூட்டாளியின் கடன் க/கு d) பிற கூட்டாளியின் முதல் க/கு

Scanned by CamScanner

12. A,B மற்றும் C என்ற கூட்டாளிகள் 2:4:3 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர். 'C' விலகிய பிறகு A மற்றும் B யின் புதிய இலாபப் பகிர்வு விகிதம்
a) 2 : 3 b) 4 : 2 c) 2 : 1 d) 1 : 2
13. முக மதிப்பை விட அதிகமாக பெற்ற தொகை வரவு வைக்கப்படும் கணக்கு
a) பத்திர முனைமக் க/கு b) அழைப்பு முன்பணக் க/கு
c) பங்கு முதல் க/கு d) பங்கு ஒறுப்பிழப்பு க/கு
14. ரூ.80 செலுத்தப்பட்ட ரூ.100 மதிப்புடைய பங்கு ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது எனில், அதன் குறைந்த அளவு மறு வெளியீட்டு விலை
a) பங்கொன்று ரூ.20 b) பங்கொன்று ரூ.50
c) பங்கொன்று ரூ.80 d) பங்கொன்று ரூ.100
15. இருப்புநிலைக்குறிப்பு வணிக நிறுவனத்தின் நிதி நிலை பற்றிய ________ தகவல்களை வழங்குகிறது.
a) ஒரு காலகட்டத்திற்கு மேலான b) ஒரு குறிப்பிட்ட நாளுக்குரிய
c) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான d) குறிப்பிட்ட கணக்காண்டிற்குரிய
16. ஒரு வணிகத்தின் முதலாம் ஆண்டுச் செலவுகள் ரூ.80,000. இரண்டாம் ஆண்டில் செலவுகள் ரூ.88,000 ஆக அதிகரித்திருந்தது. இரண்டாம் ஆண்டின் போக்கு விகிதம் என்ன?
a) 10% b) 110% c) 90% d) 11%
17. பொருத்துக:
a) நடப்பு விகிதம் 1. நீர்மைத்தன்மை
b) நிகர இலாப விகிதம் 2. செயல்திறன்
c) புற அக பொறுப்புகள் விகிதம் 3. நீண்ட கால கடன் தீர்க்கும் திறன்
d) சரக்கிருப்பு சுழற்சி விகிதம் 4. இலாபத்தன்மை
a) 1 4 3 2 b) 3 2 4 1 c) 4 3 2 1 d) 1 2 3 4
18. நடப்புச் சொத்துகள் ரூ.1,50,000, சரக்கிருப்பு ரூ.30,000, நடப்பு பொறுப்பு ரூ.60,000 எனில் விரைவு விகிதம்
a) 1 : 1 b) 2.5 : 1 c) 2 : 1 d) 1 : 2
19. எதிர்பதிவு சான்றாவணம் எதற்காகப் பயன்படுகிறது?
a) தலைமைப் பதிவு b) சொத்துகள் கடனுக்கு வாங்கியது
c) அறிக்கைகள் d) அலுவலக பயன்பாட்டிற்காக வங்கியிலிருந்து எடுத்த ரொக்கம்
20. சம்பளம் கணக்கு பின்வரும் எந்த தலைப்பின் கீழ் வரும்?
a) நேரடி வருமானங்கள் b) நேரடி செலவினங்கள்
c) மறைமுக வருமானங்கள் d) மறைமுக செலவினங்கள்

## பகுதி - II

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 30 கட்டாய வினா)* 7 x 2 = 14

21. பின்வரும் விவரங்களிலிருந்து இலாபம் அல்லது நட்டம் காண்க.

| விவரம் | தொகை ரூ. |
|---|---|
| ஆண்டின் தொடக்க முதல் | 5,00,000 |
| கூடுதல் முதல் | 2,50,000 |
| இறுதி முதல் | 9,50,000 |
| எடுப்புகள் | 2,00,000 |

22. உயில் கொடை என்றால் என்ன?
23. ராஜா என்ற கூட்டாளி 2015 ஏப்ரல் 1 அன்று ரூ.30,000 எடுத்துக் கொண்டார். எடுப்பு மீது வட்டி ஆண்டுக்கு 10% எனில் மாறுபடும் முதல் முறை எனக் கொண்டு 2015, டிசம்பர் 31 அன்று எடுப்பு மீது வட்டி காண்க.

Scanned by CamScanner

24. நற்பெயர் என்றால் என்ன?

25. ரகு, ராம் என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை 3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். அவர்கள் ராஜா என்பவரை 1.1.18 அன்று கூட்டாளியாக சேர்த்தனர். அந்நாளில் அவர்களின் இருப்புநிலைக் குறிப்பின் சொத்துக்கள் பக்கத்தில் பகிர்ந்து தரா நட்டம் ரூ.60,000 ஆக இருந்தது. சேர்ப்பின் போது பகிர்ந்து தரா நட்டத்தை பகிர்வதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

26. ஆதாய விகிதம் என்றால் என்ன?

27. ஒரு வரையறு நிறுமம் ரூ.10 மதிப்புள்ள 20,000 பங்குகளை ரூ.2 முனைமத்தில் வெளியிட்டது. அனைத்து தொகையும் விண்ணப்பத்துடன் பெறப்பட்டது. குறிப்பேட்டுப் பதிவு தருக.

28. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளை பட்டியலிடவும்.

29. கணக்கியல் விகிதங்கள் என்றால் என்ன?

30. கணக்கியல் அறிக்கைகள் என்றால் என்ன?

## பகுதி - III

III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி: 7 x 3 = 21

31. இரட்டைப் பதிவு முறை மற்றும் முழுமை பெறா பதிவேடுகளுக்கும் உள்ள வேறுபாடுகள் மூன்றினைக் கூறுக.

32. பின்வரும் விவரங்களிலிருந்து 2018, டிசம்பர் 31-ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் சந்தா எவ்வாறு தோன்றும் என்பதைக் காட்டவும்.

2018 ல் பெற்ற சந்தா ரூ.20,000 ல் 2017-ஆம் ஆண்டுக்கான ரூ.4,000 மற்றும் 2019 ஆம் ஆண்டிற்கான ரூ.7,000 அடங்கியுள்ளது. 2018 ஆம் ஆண்டில் பெற வேண்டிய சந்தா ரூ.5,000. 2017 ஆம் ஆண்டில் 2018 ஆம் ஆண்டிற்கான சந்தா முன்கூட்டிப் பெற்றது ரூ.3,000

33. நற்பெயரைத் தீர்மானிக்கும் காரணிகள் மூன்றினைக் கூறுக.

34. தேவி மற்றும் பானு என்ற கூட்டாளிகள் தங்கள் இலாப நட்டங்களை 5:3 எனும் விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். மாலா என்பவரை புதிய கூட்டாளியாக சேர்க்கும் போது அவர்கள் பின்வரும் முடிவுகள் எடுத்தனர்.

a) கட்டடம் மதிப்பினை ரூ.20,000 ஆக உயர்த்த வேண்டும்.
b) கணக்கேடுகளில் இதுவரை பதியப்படாத ரூ.5,000 மதிப்புள்ள முதலீடுகளைக் கணக்கில் கொண்டு வர வேண்டும்.
c) இயந்திரம் மதிப்பு ரூ.7,000 மற்றும் அறைகலன் மதிப்பு ரூ.6,000 குறைக்க வேண்டும்.
d) பற்பல கடனீந்தோரால் ரூ.8,000 போக்கெழுத வேண்டும்.

மறுமதிப்பீட்டுக் கணக்கினைத் தயாரிக்கவும்.

35. வாணி, ராணி மற்றும் வேணி என்ற கூட்டாளிகள் தங்கள் இலாபநட்டங்களை 5:3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2018 டிசம்பர் 31 அன்று ராணி நிறுவனத்திலிருந்து விலகுகிறார். அவர் விலகும் நாளில் அவருடைய முதல் கணக்கு ரூ.5,00,000 வரவு இருப்பினைக் காட்டியது.

i) அவருடைய தொகை காசோலை மூலம் உடனடியாகச் செலுத்தப்பட்டால்
ii) அவருடைய தொகை உடனடியாக செலுத்தப்படவில்லை எனில்
iii) ரூ.2,00,000 உடனடியாக காசோலை மூலம் செலுத்தப்பட்டது.

என்ற சூழ்நிலைகளுக்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

36. ஒரு நிறுமம் பங்கொன்று ரூ.10 வீதம் 5,000 பங்குகளை விண்ணபத்தின் போது முழுத் தொகையும் செலுத்தும் வகையில் வெளியிட்டது. கீழ்க்கண்ட நிலைகளில் குறிப்பேட்டுப் பதிவு தரவும்.

i) பங்குகளை முகமதிப்பில் வெளியிட்டால் ii) பங்கொன்று ரூ.2 தள்ளுபடியில் வெளியிட்டால்

37. முத்து நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்த ஒப்பீட்டு வருமான அறிக்கையைத் தயாரிக்கவும்.

| விவரம் | 2015-16 ரூ. | 2017-18 ரூ. |
|---|---|---|
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 30,000 | 45,000 |
| இதர வருமானம் | 4,000 | 6,000 |
| செலவுகள் | 10,000 | 15,000 |
| வருமான வரி | 20% | 20% |

Scanned by CamScanner

38. முகேஷ் நிறுமத்தின் பின்வரும் இலாப நட்ட அறிக்கையிலிருந்து i) மொத்த இலாப விகிதம் ii) நிகர இலாப விகிதம் கணக்கிடவும்

முகேஷ் நிறுவனத்தின் இலாப நட்ட அறிக்கை

| விவரம் | தொகை ரூ. |
|---|---|
| I. விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 5,00,000 |
| II. இதர வருமானம் | |
| முதலீடு மூலம் வருவாய் | 40,000 |
| III. மொத்த வருவாய் (I + II) | 5,40,000 |
| IV. செலவுகள் | |
| கொள்முதல் செய்த செலவுகள் | 1,80,000 |
| சரக்கிருப்பு மாற்றம் | 20,000 |
| பணியாளர் நலன்களுக்கான செலவுகள் | 30,000 |
| இதர செலவுகள் | 1,10,000 |
| வரி விதிக்கு | 50,000 |
| மொத்த செலவுகள் | 3,90,000 |
| V. அவ்வாண்டிற்கான இலாபம் | 1,50,000 |

39. கணினிமயக் கணக்கியல் முறையின் பயன்பாடுகளில் ஏதேனும் ஐந்தினைக் கூறுக.

40. விகித பகுப்பாய்வின் ஏதேனும் மூன்று நன்மைகளைக் கூறுக.

## பகுதி - IV

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 7 x 5 = 35

41. a) சென்னை மனமகிழ் மன்றத்தின் கீழ்க்காணும் பெறுதல்கள், செலுத்துதல்கள் கணக்கிலிருந்து 2018 மார்ச் 31-ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வருவாய், செலவினக் கணக்கினைத் தயாரிக்கவும்.

| பெறுதல்கள் | ரூ. | செலுத்துதல்கள் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்க இருப்பு | | அறைகலன் வாங்கியது | 42,000 |
| கை ரொக்கம் | 10,000 | வாடகை | 1,800 |
| உறுப்பினர் சந்தா | 30,000 | செயலர் மதிப்பூதியம் | 16,000 |
| பங்காதாயம் பெற்றது | 25,800 | தபால் செலவிகள் | 2,300 |
| முதலீடுகள் மீது வட்டி | 1,250 | தணிக்கை கட்டணம் | 5,000 |
| பழைய செய்தித்தாள் விற்றது | 3,000 | அச்சு எழுதுபொருள் | 10,000 |
| பாதுகாப்பு பெட்டக வாடகை | 9,000 | பொதுச் செலவுகள் | 5,450 |
| அறைகலன் விற்றது | 6,500 | இறுதி இருப்பு | |
| (ஏட்டு மதிப்பு ரூ.5,500) | | கை ரொக்கம் | 3,000 |
| | 85,550 | | 85,550 |

*(அல்லது)*

b) பின்வரும் விவரங்களிலிருந்து 2019, மார்ச் 31-ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபார, இலாப நட்ட க/கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

| விவரம் | 31.3.18 ரூ. | 31.3.19 ரூ. |
|---|---|---|
| சரக்கிருப்பு | 2,20,000 | 1,60,000 |
| கடனாளிகள் | 5,30,000 | 6,40,000 |
| வங்கி ரொக்கம் | 60,000 | 10,000 |
| இயந்திரம் | 80,000 | 80,000 |
| பற்பல கடனீந்தோர் | 3,70,000 | 4,20,000 |

Scanned by CamScanner

பிற தகவல்கள்:

| விவரம் | ரூ. |
|---|---|
| வாடகை | 1,20,000 |
| பெற்ற தள்ளுபடி | 35,000 |
| அளித்த தள்ளுபடி | 25,000 |
| எடுப்புகள் | 1,00,000 |
| ரொக்க விற்பனை | 20,000 |
| கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 11,00,000 |
| கடனீந்தோரிடமிருந்து பெற்ற ரொக்கம் | 12,50,000 |
| 1.4.18 அன்று முதல் | 5,20,000 |

42. a) ராஜ் முறையான கணக்கேடுகளைப் பின்பற்றுவதில்லை. அவருடைய பதிவேடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்கள் பின்வருமாறு:

| விவரம் | 1.1.18 ரூ. | 31.12.18 ரூ. |
|---|---|---|
| கை ரொக்கம் | 80,000 | 90,000 |
| சரக்கிருப்பு | 1,80,000 | 1,40,000 |
| கடனாளிகள் | 90,000 | 2,00,000 |
| கடனீந்தோர் | 1,30,000 | 1,95,000 |
| வங்கிக் கடன் | 60,000 | 60,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | 80,000 | 45,000 |
| பொறி மற்றும் இயந்திரம் | 1,70,000 | 1,70,000 |

அவ்வாண்டில் அவர் கொண்டு வந்த முதல் ரூ.50,000. சொந்தப் பயனுக்காக மாதந்தோறும் ரூ.2,500 எடுத்துக் கொண்டார். மேற்கண்ட தகவல்களிலிருந்து இலாப நட்ட அறிக்கை தயாரிக்கவும்.

***(அல்லது)***

b) கீழ்க்காணும் விவரங்களிலிருந்து மதுரை விளையாட்டு மன்றத்தின் 2019-மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்க ரொக்க இருப்பு | 15,000 | சம்பளம் அளித்தது | 12,000 |
| தொடக்க வங்கியிருப்பு | 25,000 | ஆண்டுவிழாச் செலவுகள் | 15,000 |
| நன்கொடை பெற்றது | 48,000 | ஒளியூட்டுச் செலவுகள் | 16,500 |
| பழைய உபகரணங்கள் விற்றது | 26,000 | பொழுதுபோக்குச் செலவுகள் | 13,500 |
| சிற்றுண்டிச் செலவுகள் | 13,000 | பில்லியார்ட்ஸ் மேசை வாங்கியது | 5,000 |
| மன்ற ஆண்டு விழா வசூல் | 18,000 | | |
| அறக்கொடை வசூல் | 4,000 | நாடக செலவுகள் | 3,000 |
| வாடகை செலுத்தியது | 1,000 | முதலீடுகள் விற்றது | 12,000 |
| மைதான கட்டுமானச் செலவுகள் | 7,000 | இறுதி ரொக்க இருப்பு | 12,000 |

Scanned by CamScanner

43. a) பின்வரும் தகவல்களிலிருந்து கந்தன் மற்றும் கண்ணன் எனும் கூட்டாளிகளின் முதல் கணக்குகளை அவர்களின் முதல் மாறுபடும் முதலாக இருக்கும் போது தயாரிக்கவும்.

| விவரம் | கந்தன் ரூ. | கண்ணன் ரூ. |
|---|---|---|
| 1.1.18 அன்று முதல் | 3,00,000 | 2,50,000 |
| எடுப்புகள் | 40,000 | 35,000 |
| எடுப்பு மீது வட்டி | 1,000 | 500 |
| இலாபப் பங்கு | 21,000 | 16,500 |
| முதல் மீது வட்டி | 12,000 | 10,500 |
| ஊதியம் | 18,000 | --- |
| கழிவு | --- | 2,500 |

*(அல்லது)*

b) ஆனந்த் மற்றும் நாராயணன் என்ற கூட்டாளிகள், தங்கள் இலாப நட்டங்களை 5:3 எனும் விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2018 ஜனவரி 1 அன்று அவர்களுடைய முதல் முறையே ரூ.50,000 மற்றும் ரூ.30,000. கூட்டாண்மை ஒப்பாவணம் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகிறது.

i) முதல் மீது வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்க வேண்டும்.

ii) ஆனந்த் மற்றும் நாராயணனுக்கு விதித்த எடுப்புகள் மீதான வட்டி முறையே ரூ.1,000 மற்றும் ரூ.800

iii) முதல் மீது வட்டி மற்றும் எடுப்புகள் மீதான வட்டி கழிப்பதற்கு முன் உள்ள நிறுவனத்தின் நிகர இலாபம் ரூ.35,000.

கூட்டாளிகளுடைய முதல், மாறுபடும் முதல் எனக் கொண்டு தேவையான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும். மற்றும் 2018டிசம்பர் 31-ஆம் நாளைய இலாப நட்டப் பகிர்வுக் கணக்கைத் தயார் செய்யவும்.

44. a) அருள் வணிக நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து 3 ஆண்டுகள் சராசரி, இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பினைக் கணக்கிடவும்.

i) டிசம்பர் 31-ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுகளான 2016, 2017 மற்றும் 2018-ன் இலாபங்கள் முறையே ரூ.46,000, ள.44,000 மற்றும் ரூ.50,000

ii) 2016-ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ரூ.5,000 சேர்ந்துள்ளது.

iii) 2017-ஆம் ஆண்டின் இறுதி சரக்கிருப்பு ரூ.10,000 அதிகமாக மதிப்பிடப்பட்டது.

*(அல்லது)*

b) பின்வரும் விவரங்களிலிருந்து உயர் இலாபத்தில்டி இரண்டு ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

i) நிறுவனத்தின் மொத்த சொத்துகள் ரூ.5,00,000

ii) நிறுவனத்தின் பொறுப்புகள் ரூ.2,00,000

iii) இவ்வகை தொழில்களின் சாதாரண இலாப விகிதம் 12.5%

iv) நிறுவனத்தின் சராசரி இலாபம் ரூ.60,000

45. a) வெற்றி மற்றும் இரஞ்சித் என்ற கூட்டாளிகள் 3:2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். 31.3.18 ல் அவர்களது இருப்புநிலைக்குறிப்பு பின்வருமாறு இருந்தது.

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | | அறைகலன் | 25,000 |
| வெற்றி | 30,000 | | சரக்கிருப்பு | 20,000 |
| இரஞ்சித் | 20,000 | 50,000 | கடனாளிகள் | 10,000 |
| காப்பு நிதி | | 5,000 | கை ரொக்கம் | 35,000 |
| கடனீந்தோர் | | 45,000 | இலாப நட்ட க/கு [நட்டம்] | 10,000 |
| | | 1,00,000 | | 1,00,000 |

Scanned by CamScanner

பின்வரும் சரிக்கட்டுதல்களில் 1.1.2019 அன்று சூரியா என்பவர் புதிய கூட்டாளியாக சேருகிறார்.

i) சூரியா 1/4 இலாபப் பங்கிற்காக ரூ.10,000 முதல் கொண்டு வருகிறார்.

ii) சரக்கிருப்பு 10% குறைத்து மதிப்பிடப்படுகிறது.

iii) அறைகலன் மதிப்பு ரூ.40,000 என மாற்றி அமைக்கப்படுகிறது.

iv) கடனாளிகள் ரூ.7,500 என மதிப்பிடப்படுகிறது.

v) கொடுபட வேண்டிய கூலி ரூ.4,500 இதுவரை பதியப்படவில்லை.

மறுமதிப்பீட்டு இலாபம் ரூ.6,000 எனக் கொண்டு முதல் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும். *(அல்லது)*

b) சுந்தர், விவேக் மற்றும் பாண்டியன் என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை 3:2:1 எனும் விகிதத்தில் பகிர்ந்து கொண்டனர். அவர்களின் 31.12.18-ம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு:

| பொறுப்புகள் | ரூ. | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | | நிலம் | 80,000 |
| சுந்தர் | 50,000 | | சரக்கிருப்பு | 20,000 |
| விவேக் | 40,000 | | கடனாளிகள் | 30,000 |
| பாண்டியன் | 10,000 | 1,00,000 | வங்கி ரொக்கம் | 14,000 |
| பொதுக்காப்பு | | 36,000 | இலாப நட்ட க/கு | 6,000 |
| கடனீந்தோர் | | 14,000 | (நட்டம்) | |
| | | 1,50,000 | | 1,50,000 |

1.1.19 அன்று பாண்டியன் இறந்து விட்டார். அவரின் இறப்பின் போது பின்வரும் சரிக்கட்டுதல்கள் செய்யப்பட்டன.

i) சரக்கிருப்பின் மதிப்பு 10% தேய்மானம் நீக்கப்பட வேண்டும்.

ii) நிலத்தின் மதிப்பு ரூ.11,000 அதிகரிக்கப்பட வேண்டும்.

iii) கடனாளிகள் மதிப்பு ரூ.3,000 குறைக்க வேண்டும்.

v) பாண்டியனுக்கு செலுத்த வேண்டிய இறுதித்தொகை செலுத்தப்படவில்லை.

கூட்டாளியின் இறப்பிற்கு பின் நிறுமத்தின் மறுமதிப்பீட்டுக் க/கு மற்றும் முதல் க/கு தயாரிக்க.

46. a) சரண்யா வரையறு நிறுமம் 40,000 சாதாரண பங்குகளை பங்கொன்று ரூ.10 வீதம் வெளியிட்டது. பங்குகளுக்கான தொகை பின்வருமாறு செலுத்தப்பட வேண்டும்.
விண்ணப்பத்தின் போது ரூ.2; ஒதுக்கீட்டின் போது ரூ.3;
முதலாவது அழைப்பின் போது ரூ.4; இரண்டாவது மற்றும் இறுதி அழைப்பின் போது ரூ.1
அனைத்து பங்குகளும் ஒப்பப்பட்டு, தொகை முழுவதும் பெறப்பட்டது எனில் குறிப்பேட்டுப் பதிவு தரவும். *(அல்லது)*

b) சுரேஷ் நிறுமம் ஒன்று ரூ.10 மதிப்புடைய ரூ.2,00,000 நேர்மைப் பங்குகளை பங்கொன்றுக்கு ரூ.2 வீதம் முனைமத்தில் வெளியிட்டது.
விண்ணப்பத்தின் போது ரூ.3; ஒதுக்கீட்டின் போது ரூ.5 (முனைமம் உட்பட);
முதல் மற்றும் இறுதி அழைப்பின் போது ரூ.4

மிகை ஒப்பம் உள்ள நிலையில் 3,00,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன. மிகுதியாகப் பெற்ற விண்ண்ப்பங்கள் நிராகரிக்கப்பட்டு, அனைத்து தொகைகளும் பெறப்பட்டது எனில் குறிப்பேட்டுப் பதிவு தரவும்.

Scanned by CamScanner

47. a) பின்வரும் விவரங்களைக் கொண்டு பூமி வரையறு நிறுமத்தின் போக்குப் பகுப்பாய்வினைக் கணக்கிடவும்.

| விவரம் | ரூ. இலட்சங்களில் | | |
|---|---|---|---|
| | வருடம்-1 | வருடம்-2 | வருடம்-3 |
| I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | | | |
| பங்குதாரர் நிதி | 250 | 275 | 300 |
| நீண்ட கால பொறுப்புகள் | 100 | 125 | 100 |
| நடப்பு பொறுப்புகள் | 50 | 40 | 80 |
| மொத்தம் | 400 | 440 | 480 |
| II. சொத்துகள் | | | |
| நிலைச் சொத்துகள் | 300 | 360 | 390 |
| நடப்பு சொத்துகள் | 100 | 80 | 90 |
| மொத்தம் | 400 | 440 | 480 |

***(அல்லது)***

b) பின்வரும் விவரங்களிலிருந்து i) புற அக பொறுப்புகள் விகிதம் மற்றும் ii) உரிமையாளர் விகிதம் கணக்கிடவும்.

31.3.19 ம் நாளைய இருப்புநிலைக்குறிப்பு

| விவரம் | ரூ. |
|---|---|
| I. பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள் | |
| 1. பங்குதாரர் நிதி | |
| a) i) நேர்மைப் பங்கு முதல் | 1,50,000 |
| ii) முன்னுரிமைப் பங்கு முதல் | 2,00,000 |
| b) காப்புகள் மற்றும் மிகுதி | 1,50,000 |
| 2. நீண்ட கால பொறுப்புகள்: | |
| நீண்ட காலக் கடன்கள் | 4,00,000 |
| 3. நடப்பு பொறுப்புகள் | |
| a) வங்கியிலிருந்து பெற்ற குறுகிய கால கடன்கள் | 1,00,000 |
| மொத்தம் | 10,00,000 |
| II. சொத்துகள் | |
| 1. நீண்ட காலச் சொத்துகள் | |
| நிலைச் சொத்துகள் | 7,50,000 |
| 2. நடப்பு சொத்துகள் | |
| a) சரக்கிருப்பு | 1,20,000 |
| b) கணக்குகள் மூலம் பெற வேண்டியவை | 1,00,000 |
| c) ரொக்கம் | 30,000 |
| மொத்தம் | 10,00,000 |

******

Scanned by CamScanner